உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.



இரங்கோன்

தைப்பூச மகோற்சவ வழிநடை அலங்காரச் சிந்து.

இஃது

மதுரை ஜில்லா, குண்ணகர சேகரம்,
ஆலம்பட்டிமா நகரின்கண் வசிக்கும்
சிவ சண்முகவேல் கடாக்ஷ ஜோசிய வயித்தியம்
பி. ஆர். பி. அய்யங் கோவில்

அம்பலம் அவர்களால்

இயற்றியதை

இரங்கோன், தென்காஞ்சி,
சாமிவேல்-பவர் பிரஸில் அச்சிடப்பெற்றது.

இதன் விலை. 1924. அணா. 2

சிசு உற்பத்தி சிந்தாமணி
யென்னும்
மானிட மர்ம சாஸ்திரம்.

சித்திரப் படங்களுடன் பிரசாசிப்பது. 900 பக்கங்களுக்கு மேல் தேசாபிமான யுக்தி பொதிந்துள்ளது. பிரதாப மிகுந்த பெரியோர் படங்களும சரித்திரமும் அடங்கியுள்ளது. தர்ம சாஸ்திரமும், நீதி நூல்களும் மேறகோட்களும் அமையப்பெற்றது. குடும்ப நிர்வாக சாஸ்திரமும, சமயோசிதமாய் உபயோகித்துக்கொள்ளக்கூடிய சஞ்சீவியான பல ஔஷதமுறைகளும் அடங்கியுள்ளது. இதிற்கண்ட விதிகளை மணம்புரிந்த சதிபதிகள் அனுஷ்டித்து வருவதால் பதிவிரதா தர்மத்திலும், தேசாபிமானத்திலும், தெய்வ பக்தியிலும் வளருவதுடன், கருவுற்றது முதலுள்ள நோய்களும், பிரசவத்தில் நேரிடக்கூடிய இடையூறுகளும், அகால மரணமும், அகாலப் பிரவசமும் அநேகமாய் நீங்கி வேதனையின்றி மகவீன்று மகிழ்வார்களெனபதற் கையமில்லை. ஆயிரக்கணக்கான ஸ்திரீ ரதனங்கள் இப்புஸ்தகத்தின் முதல் பதிப்பை எப்பொழுதும் கைவசம் வைத்து உபயோகித்து நன்மை யடைந்ததாக நற்சாட்சி பகர்ந்திருக்கின்றனர்.

முன் பதிப்பில் காணப்படாத பல அரிய முறைகளை இதில் எடுத்துக் காண்பித்திருக்கிறோம் என்பதை உபயோகித்தவர் அறிவர். பல வித்வான்களும், பண்டித சிரோன்மணிகளும், கொடுத்திருக்கும் நற்சாட்சிப் பத்திரங்களும் இதன் பயனை நன்கு விளக்கும்.

பக்தியை விளைவித்து பதிவிரதா தர்மத்தையும், அகன்ற அறிவையும் தரக்கூடிய இந்நூல் யாவர்க்கும் பயன்படுமாறு காகித விலையேற்றத்தையும், அச்சிடும் கஷ்டத்தையும், பெருஞ்செலவையுங் கருதாது அரைத்தோல் கட்டடத்திற்கு ரூ. 7. நியமித்துள்ளோம். புதிதாய் விவாக நிலைமைக்குட் பிரவேசிப்பவர்களுக்கு இனாமளிக்கக்கூடிய முழுத்தோல் கட்டடத்திற்கு ரூ. 8.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வேண்டுவோர் நேரிலும், வி. பி. மூலமாகவும் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாமிவேல் வைத்தியசாலை,
தென்காஞ்சி, இரங்கோன்.

உ
சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

இரங்கோன்

தைப்பூச மகோற்சவ
வழி நடை அலங்காரச் சிந்து.

விருத்தம்.

மங்கையே சொல்வேன் கேளாய் மாணிலம் புகழ் ரெங்கோனில்
இங்கிர்த மிகுந் தைப்பூச உற்சவம் பார்க்கவே யென்
தங்கமே நகைகளாடை சந்தோஷ மாயணிந்து
ஐங்கரனடியைப் போற்றி அன்னமே போய் வருவோம்,|

அள்ளி அள்ளி நீர் குடிக்கு மேன்ற மெட்டில் பின் முடுகும் கண்ணிகள்.

இராகம்—இந்துஸ்தான் பியாகு—தாளம் ஆதி.

1. பூமிபுகழுங் கந்தசாமி மகிமையாம்
பொங்குந்தைப்பூசப் பெருமையாம்பார்க்கஅருமையாம் (பொ)
எந்தன்—பூவையேவாடி நாம் ஜோடியாகப்பதம்
பாடியே ரெங்கோனை நாடியேக நிதம் (பூமி)

2. காமதஞ் செய்யாமல்நீ தலைதனைச் சீவியே
சாந்து சவ்வாது பூசியே-கையை-வீசியே (சா)
தங்க—ஆபரணங்களெடுத்து நீ பூட்டடி
கோகிலமே நல்ல சேலையைக் கட்டடி. (கா)

3. இங்கிர்த மானே நாம் சங்கீர்தங் கூறினோம்
ரெங்கோன் நகரைக் கோரினோம்-கப்பலேறினோம் (ரெங்)
இன்று—இங்கே வந்தோமடி மங்களமாகவே
செங்கை வடிவேலன் சேவடி காணவே, (இங்

மாச்சிமை தங்கும் ரெங்கோன் காச்சியைப் பாரடி
மாட மாளிகை ஜோரடி-வெகு-சீரடி (மாட

இந்த-மண்டலந்தனிலே யிந்த நகர்க்கீடு
4. அண்டர்நாடன்றிவேறுண்டோதள்ளிப்போடு (மா)

சிங்கப்பூர் லண்டன் பம்பாய் ஸ்டீமர் ரெங்கோன் தேடி
திரள் திரளாகவே கூடி-ரேவில்-நாடி (திர)

மானே—செப்பொன்ணு சாமான் யிரக்குரார் பாரடி
5. இப்புவிமீதி லிதர்க்கிணை கூரடி (சிங்)

வங்காளி கோரங்கியர் மகமதியர் கூட்டமே
வர்மாக் காரர்கள் நாட்டமே-ஜனம் - தேஷ்டமே (வர்)

மாதே—மட்டடங்காத துரைமார் வெகுபேர்கள்
6. திட்டமுடன் செய்யும் வர்த்தகச் சீர்கள் (வங்)

வர்த்தகர் சூழும் மொகல்வீதி யிதுதானே
மங்கையே சொல்குவேனுனே-கேளாய்-மானே! (மங்)

இங்கே—மாணிக்கம் வயிரம் பச்சை சிகப்புகள்
7. ஆணிப்பொன் யாபாரம்செய்யும்பிரபுகள் (வா)

உம்பர் புகழும் நாட்டுக் கோட்டை நகரத்தார்
உத்தம மிகுந் குணத்தார்-நல்-வரத்தார் (உத்)

செய்த—உன்னிதமானதோர் வெள்ளி ரதம் பாராய்
8. பன்னிரு கையன் பவனிவரச் சீராய் (உம்)

அயன் முதல் தெய்வ தச்சர் செய்வதரிதாகுமே
அன்னமே பாரதலங்காரமே-சிங்-காரமே (அன்)

மிக—அற்புதமாகிய செம்பொன் நவமணி
9. கற்களழுத்திப் பொதிந்த ரதப்பணி (அய)

வயிரம் சிகப்புப் பச்சை மாணிக்கத் தோரணம்
மாமறையோர்களாரணம்-சொல்லும்-காரணம் (மா)

பாராய்—வஞ்சியே ஆரரை மீதமர் கந்தனை
10. கொஞ்சும் ரதமேர கெஞ்சுரார் வந்தனை (வயி)

சங்கீத மேளவாத்தியம் யெங்கும் முழங்கவே
சண்முகவேல் துலங்கவே-மயில்-குலங்கவே (சண்)

கந்த—சாமி ரதமீதிலேறத் திரப்பெற்றார்
11. பூமியிலெங்கும் புகழ் வரப் பெற்றார் (சங்)

மல்லிகை முல்லையிரு வாட்சியலராலே
வச்சிரப் பதக்கங்கள் போலே-அணிந்தார் மாலை (வச்)

சூர—வள்ளி தெய்வானையி னுள்ள மகிழ்ந்திட
12. புள்ளி மயில்மீது வள்ளலமர்ந்திட (மல்)

தீபாராதனை செய்குரார் தேவியே போற்றுவாய்
செங்கை வேலனை வாழ்த்துவாய்-துயரோட்டுவாய் (செ)

நாமள்—தீவினை யாவையு மேகிடச் செய்குவார்
13. மேவி பணிந்திடவே வரம் யீகுவார் (தீப

அதிர்வேட்டுச் சத்தமிந்த அண்டம் நடுங்கவே
ஆதிசேடன் மயங்கவே.கலி - தியங்கவே (ஆதி)

இப்போ—ஆறுமுகவன் பவணி வருகிரார்
14. தேவர்கள் யாவரும் பூமாரி பெய்குரார் (அதி)

ஆலவட்டங் குடைவெஞ் சாமரம் போடவே
அன்பர் தேவாரம் பாடவே - மயிலாடவே (அன்)

மிக—அந்தமாய் ரிஷபம் ரதமிளுக்கவே
15. செந்திரு வேலவன் சிந்தை களிக்கவே (ஆல)

பார்க்குள் விசேஷம் நாளும் தாக்களாவில் வாழும்
பழனி ஆண்டி அம்பலம் - பொன் - னம்பலம் (பழ

கந்தன்—பவணிக்கேற்ற நல் ரிஷபங் கொடுத்தார்
16. அவனி புகள் குகனை யடுத்தார் (பா)

காவடிகளைப் பாராய் கோடான கோடியே
கந்தன் சமுகந் தேடியே - நின் - றாடியே (கந்)

சிவ—கந்தா குகா ஞான தேசிகா வாவென
17. சிந்தை மகிழ்வுட னந்தம தாய்கன (காவ)

கவர்மெண்டார் போலீஸார்கள் யிருபுரம் சூழ்ந்திட
காடி ஜனம் விலகிட - ரதம் - யேகிட (கா)

இந்த—காசினியோர்கள் மாசில்லாத பர
18. மேசனருள் முருகேசன் மகிழ்வுர (கவர்)

மாமகள் வாழும் மொகல்வீதி கடந்தோமே
மாரதம் பின் துடர்ந்தோமே - சந் - தோசமே (மா)

ஆசை—மங்கையேநீ ஜனசங்கை யிலேகாதே
10. அங்கு மிங்கும் சென்றால்சங்கட மாகாதே (மா

பிரேசர் ரோட்டினில் ரதம் விரைவுட னேகுதே
பெண்ணே யென்பின்வா யிப்போதே - ரோட்டின்மீதே (பெ)
இதோ—பின்னமில்லா நல்ல சூலை பகோடா ரோட்
20 டின்னிதம்பாரடி இன்னஞ்சொல்வேனடி (பிரே)

ரோட்டில் ஜனங்கள் வெகு கூட்டம் லஞ்சாக் காடி
மோட்டார் வருகுதே ஓடி - கோடா-கோடி (மோட்)
ரத—முன் பாக யேகுவோம் கெம்பீரக் குயிலே
21 அன்பாகக்கந்தனைக் கும்பிடு மயிலே (ரோ)

மாணிக்கக் கந்தனுக்கு காணிக்கைப் பிரார்த்தனை
வணங்கும் அன்பர் தீபார்தனை - நம்மள் - கர்த்தனை (வ)
எந்தன்—வஞ்சியேநீ பாராய் ரஞ்சித மாகுதே
22 நெஞ்சமதி லுறுஞ் சஞ்சல மேகுதே (மா)

அன்னமே ஆங்கிலேயர் நன்னீதங் காட்டியே
அரசாங்கக் கொடிநாட்டியே - ஞாயம் - பூட்டியே (அர)
ஆளும்—ஐகோட்டின் கட்டட அலங்காரம் பாரடி
23 மைவிளியாளே மனங்களி கூரடி (அன்)

புதுரோட்டுக் காடித்தான் பூந்தட்டான் ரோட்டிது
பெண்ணே டிராம்வண்டி யேகுது — நல்ல • ஊரிது (பெ)
யிங்கே—பொங்கரவமணி சங்கரன் பாலகன்
24 தங்கும் மகிமையோ ரெங்கோன்புதுமை (புது)

சண்முக னடியரர்கள் தண்ணீர்ப் பந்தல் பாராய்
தாகத்துக் கருந்துவோம் வாராய் - நாமள் - சீராய் (தா)
ஆஹா—சர்க்கரை பாணக்கம் முக்கனி ரசமோ
25 பக்குவமாக அமைத்த அற்புதமோ (சண்)

பாவையே பசுமந்தான் பஜார் கடந்தோமே
பர்மியர் கூட்டங் கண்டோமே-கொண்-டாட்டமே (பர்)
வெகு—பாங்குடனே ரதமேகுது யிப்போது
26 மாங்குயிலே கந்தன் கோவிலுந் தோணுது (பா)

கோபுரதங் கல்தூபி வாண்பதி தாவுதே
கொடுங்கை சிகரமேவுதே - அருள் - கூவுதே (கோ)
எந்தன்—கோதையே பாரிதோ ஆவலாகவேதான்
27 சேவலங் கொடியோன் ஆலயம் புகுந்தான் (கோ)

கற்பூர ஆலாத்தி சுத்தி கந்தனைப் போற்றினோம்
காணிக்கைமாலை சாத்தினோம் - துய - ரோட்டினோம் (கா)
ஆசைக்—கண்மணியே நாமள் பண்ணிய பாவமும்
28 இன்னமா யேகுமே நன்னயமே மிகும் (கற்)

வள்ளி தெய்வானையோடு வெள்ளிரத மேறியே
வந்தானன்பரைக் கோரியே-சவ்-வாரியே (வந்

திரு வாலகுருபரன் ஞான மருளவே
9 கோலாகாலத்துடன் ஞாலர் புகழவே (வள்)

வாதாடிய சூரரை போரோடி வோட்டினான்
வானரைச் சிறை மீட்டினான் - ஜெயங் காட்டினான் (வா)

இந்த மண்டலந்தனிலே தொண்டரைக் சேரினான்
30 பண்டு வினையேக தண்டிகை யேறினான் (வா)

அன்னதானப் பெருமை நன்னயம் சொல்லவே
ஆதிசேடனு னல்லவே - நான் - வில்லவே (ஆதி)

இதை ஆயிரம் நாவினு லோதினல் தோணுமே
31 காரணங்கள் யாவும் பூரண மாகுமே (அன்)

மூன்றுநா ளன்னதானம் வேண்டும் நைவேத்தியம்
முழங்கும் சங்கீர்த வாத்தியம் - கந்தன் - பாத்தியம் (மு)

மறை மூலனுங் கண்டு மகிழ்ந்தருள் புரிந்தார்
32 சீலமா யாரை மாளிகை சிரந்தார் (மூன்)

நகரத்தார் நாட்டிவைத்த தர்மம் தழைக்கவே
நாடெங்கும் சென்னல் செழிக்கவே - கலி - துலைக்கவே (நா)

வள்ளி நாயகன் குகன் சகாயம் பெருகுமே
33 நேயமாக மனைக்கேகுவோம் அன்னமே (நக)

பெண் சொல்லல்.

ஆசைக்கிசைந்த யெந்தன் நேசக் கண்ணாளனே
அருமைசேர் மணவாளனே-யென்-தோழனே (அரு)

இங்கே அற்புதமாகவே பற்பல சாமான்கள்
34 விற்குரார் பாருமே இப்போதே வாங்குங்கள் (ஆ)

ஆண் சொல்லல்.

விதவிதமாகவே நீ வேண்டிய சாமான்கள்
விகசிதமான சேலைகள் - நல்ல - பூவுகள் (விக)

அடி வித்தகக் கண்ணேயுன் சித்தமகிழ் தென்னை
35 நத்திய சாமான்கள் இத்ததிவாங்கினேன் (வித்)

பெண் சொல்லல்.

கந்தமிகுங் கணவா சந்தோஷ மானதே
கவலையும் நீங்கிப்போனதே - நல - மானதே (கவ)

இனி-காலதாமிதஞ் செய்யாமலே யிப்போது
36 நாமள் வாழும் மனைக் கேகிடவே தோது (கர)

ஆண் சொல்லல்.

தையிலே அய்யங்கோவில் தாசன் தமிழ்பாடி,
தைப்பூச உற்சவந் தேடி - வந்தோம் - கூடி (தை)

ஆதி-சரவணபவ குகனைப் பணிந்தோம்
37 வரம்மிகப் பெற்று தினமும் மகிழ்ந்தோம் . (தைய)

பெண் சொல்லல்.

மன்னவா நாம் வாழும் மாளிகை வந்தோமே
மங்களம் பாட அந்தமே-யார்க்கும் - சொந்தமே (மங)

இந்த-மாணிலம் வேல்ரதம் மாமறை ஐங்கரன்
38 தேவர்கள் மூவர்கள் யாவரும் வாழ்க (மன்)

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை

முற்றிற்று.

உ
சிவமயம்

சண்முகப்பிரான் கீர்த்தனங்கள்.

பல்லவி.

1. வேலுமயிலுந்துணை வடிவேலு மயிலுந்துணை-திரு
திரிமாமலர் செறிபரங்கிரிதனிலே நிதம்வளர் குருபர (வே)

அநுபல்லவி.

2. நாளும் அடியவர் கோரும் வரந்தரும்
நாதன்-மலர்பாதன்-அருள்வேதன்-ஜெகநீதன்-குகன் (வே)

சரணங்கள்.

3. தீதுரச் செய்திடும் பாதகம் யாவையும்
தீர்த்திடும் செந்திலம் பதியான்—யாரும்
ஓதுதற் கெட்டாத வேதமுடிவினில்
ஓங்கும் திருப்பரங்கிரியான்
சாது ஜனர்-தேவரோடு-மூவர்களு-மே புகழும்
தவராசன் புவிநேசன் முருகேசன் குமரேசன் (வேலு)

வழிநடை அலங்காரச்சிந்து.

3\. அம்புவியோர் நிதம் கும்பிடும் பார்வதி
அன்னை மகிழ்பாலன்—சிவ
தம்பிரானுக்குப தேசமுரை ஜோதி
சாமி சண்முக சீலன்

அண்டாவ-கண்டமுத-லெண்டிசையுமே நடுங்க
ஆடும் மயிலேறி விளையாடுங் கொண்டாடும் வடி (வேலு)

ஆனைமுக னுக்கினிய சகோதரன்
அண்டர் புகழ் கோமான்—உயர்
தேன்மொழி வள்ளி தெய்வானை மணவாளன்
தேசுயர் மா பூமான்

சித்தத்துடன் நித்தந்துதி பத்தன் அய்யங் கோவில்க்கருள்
தேவன் கனயோகன் வைபோகன் விவேகன் குகன் (வேலு)

பதம்.

பல்லவி.

கூட்டிவா மயிலே—சிவ
குமரசாமியை அவசரமுடன் (கூட்டி)

அநு பல்லவி.

தாஷ்டிகஞ் சேர்கழு காசலந் தனிலே
தங்கும் அருள்வடி வேலனை
எங்கும் புகழ்மிகுஞ் சீலனை

சரணங்கள்.

வர்ணச்சிரகை விரித் தாடியிவ்வேளை
வந்தருள் செய்குவாய் சுந்தர மயிலே
சொர்ன மயமாய்த் துலங்கிடுங் கயிலே

சுந்தர னருள்சிவ புதல்வனை
வந்தனஞ்செய்து வடி வழகனை (கூட்டி)

மாங்கனிக்காக மலைவலம் வந்தவன்
மங்கை வள்ளிதெய்வ யானைக் குகந்தவன்
பாங்குடனே அயில் வேலணிந்தவன்

பரசிவனருளிய முருகனை
வரும்படி சதுர்மறை முதல்வனை (கூட்டி)

மாசில்லாத பரமேசனருள் பாலன்
மாவுந்தேனும் வாங்கியுண்ட சீலன்
தாசன் அய்யங்கோவில் தமிழ்க்கனு கூலன்

சரவண பவனெனும் வரதனை
விரைவுடன் வரும்படி குமரனை (கூட்டி)

நடராஜா என்ற வர்ன மெட்டு.

இராகம்—நாட்டை. தாளம் ஆதி.

வடிவேலா-அருள்மிகும்-வடிவேலா—ஜெக
வாசா நேசா கைலாச யீசனருள் (வடி)

அநு பல்லவி.

படிதுதி சரஹணபவகுக-முருகனே பார்
யுனதருள்கண் பார் பரமன் மகிழ் பார்
பதியருளும் பா-லசர்வுனது
பதமலர் கெதியென நிதமிகத் துதிசெய்தேன்
யெனதிரு தயமதி லமர்ந்தருள் புரிகுவாய் (வடி)

வா-மயில் மீதேறிவா - சரவணபவா வரமருளவா
மருமலர் கமழ்கொடு வரிவிழி வனிதையர்
இருபுரம் யொளியிட மகிழ்வுருங் குருபர (வடி)

தா-கருணையருள் தா-சன் முகவரதா -கமலசேவை தா
தடவரை கிடுவென நடமிடும் மயில்மீது
திடமுடன் அடியவனிடம் ஓடி வாராய் சுடர் (வடி)

மா-தவனே திருமா-வரத பெருமா-மருகா கோபமா
மதுரகவி சொல்லய்யங் கோவில் தாசன் தமிழ்ப்பூணும்
சதுர்மறை புகழ்முருகனே யிதுததி யருள் (வடி)

இசைந்த சூல மென்ற மெட்டு.

வால சண்முக குருபர னெனவரும் வடிவேலா
ஞாலமீதினுன தடிபணிந் தேனருள் சீலா
அம்பிகை சுந்தரிய பிராமி பகவதி யருள் பாலா
நம்பிடு மடியவர் தம்பிரா னெவரும் வடிவேலா

ஆறுமுகமும் பன்னிரு கையும் வேலலங் காரா
கோரும் வரமீய குருபர னெனவரும் உபகாரா
செந்திலம் பதியில் வந்து துலங்கிய திருநாமா
மந்திரச் சடாச்சர மகிமை விளங்கிய மாபூமா

மதியணி சிவன்மன மகிழ்வுர பிரணவ உபதேசா
ததியிது மயில்மீது வரவேணும் புவிபுகழ் குமரேசா [னே
மாங்கனி தனைவேண்டி வடகிரி யொருநொடி வருவோ
தேன்மொழி வள்ளி தெய்வானை மருவிய பெருமானே

சந்ததம் அய்யங்கோவில் தாசன் தமிழ்துதிக்கருள்வோனே
எந்தனைக் காத்தருள் சுந்தர மிகுந்த இறையோனே,

இதுஒன்றுதான் திவ்வியஔஷதம்.

தாதுபுஷ்டிக்கு நிகரற்றது

மஹா ஆச்சரிய குணமுள்ளது !

இவ்வுலக மெங்கும் நற் கியாதிபெற்றது !!

மஹா அருமையான மருந்து ! ! !

அனேக வியாதியை தீர்க்கும்மருந்து !!!

மஹாராஜ மதகஜானந்த மன்மதபாணக் குளிகை

இவ்வற்புத மகிமைபொருந்திய குளிகையில் ஆயுர்வேத சாதுக்களால் கிடைக்கபெறற இவ்வற்புதமுறையை எமதுமுன்னோர்கள் பரம்பரையாக அனுபவத்தில் கையாண்டு வந்ததினால் இதற்கு அனேக வருஷங்களாக நற்கியாதியும் நற்புகழும் இத்திவ்விய குளிகையினால் வழங்கிவருகின்றதினால் இதற்கு மஹாராஜ மதகஜானந்த மன்மதபாணக் குளிகை என பெயர்புனைந்ததை அனுபவத்தில் யான் சொல்லாமலே விளங்கும். தாது வுஷ்டிக்கு இது நிகரற்றமருந்து. இதற்கு நிகரான மருந்து ஒன்றுமில்லை ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம். தாது கட்டும். பலஹீனம் போகசக்திக்குறைவு முதலியவைகளை நீக்கும் ! நரம்புகளைப் பலப்படுத்தி தேகத்திற்கு வலுவைக்கொடுக்கும். அதிக வயதாலும் பலஹீனத்தாலும் நேரிட்ட சகலவித சோர்வு, ஆண்மைக்குறைவு பலஹீனமுதலியவைகளை நீக்கி தாதுவை உறுதிப்படுத்தி ஊக்கத்தைக் கொடுத்து தாதுபுஷ்டியை யுண்டாக்குவதில் இதற்கு நிகருள்ள ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

15 குளிகைக்கு ரூபா 5

அனுபானம் பத்தியம் முதலியதும் ஔஷதத்துடன் கொடுக்கப்படும்

ஆற்றுவர் ஆற்றல்பிணி ஆற்றல்
அப்பிணியை ஆற்றுவோர் அனுபவத்தோர்

அன்புமிக்கநேயர்காள் !

இந்நிலவுலகின்கண் சர்வவல்லவ தயாநிதியாயும் சகல ஜீவாத்மாக்களையும் சிருஷ்டித்து சம்ஹாரமாக்கி ஆக்கல் அருளல் அழித்தல் என்னும் முத்தொழில்களுக்கும் காரணமாகும் கடவுளின் மகிமை பிரதாபத்தாலுள்ள மாந்தர்கள் அனைவோர்க்கும் தோன்று தொட்டுழண்டுவரும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் அவற்றுள் சாத்தியம் அசாத்தியம் என இருவகையாக பிரித்துளர். அதற்கேற்ற நிவர்த்தி செய்யும்பொருட்டு அவதரித்தமஹா மஹாத்துவம்பொருந்திய பதினெண் சித்தர்களாலும் இயற்றிய வைத்தியகிரந்தங்கள் இரண்டு லெட்சமெனவும் நம் மூதோர்க[ால்] கேழ்வி யுற்றிருக்கிறோம் ஆனது

பற்றி அக்கிரந்தங்களை அனேக ஆண்டுகளாக ஆராய்ச்சிசெய்து முயற்சியாலும் அனேகவியாதிகளை அகற்றி அருளியவரும் அனேக அரும்கிரந்தங்களின் ஆசிரியரும் அனேகருக்கு கொடை நற்சாக்ஷி பெற்றவருமான எமது முன்னோர்களின் போதனா போதனையாலும் அனேக காலம் அவர்களுடனிருந்து சங்கையறத் தெளிந்த அனுபோக அனுபவத்தாலும் தேர்ச்சியடைந்துள்ள எங்களால் அனேகவருஷங்களாக அனேகவியாதிகளை சொஸ்தப்படுத்திய மாதர்களால் இடைவிடாமல் தன்புருத்திக் கொண்டுவரும் கொடியவியாதி புலியைய எங்கள் அனுபோக ஔஷத அம்பினாலே புலிபோல்வீர் உண்டு வந்தவியாதிகளை பூனைபோல புறங்காட்டி ஓடுமென்பது யாம் சொல்லாமலே அனுபவத்தால அறியலாகும்

இக்கூறவுபட்டப் பெயர்புனைந்த எங்கள் ஔஷதத்தின் பெருமையை சொல்லவேண்டுமென்றால் பலர் படோடபமென கருதுவார்கள் என்று இம்மட்டோடு நிறுத்தலாயினோம். தாங்கள் ஒருமுறை எங்கள் ஔஷதத்தை பிரயோகித்து எங்களது ஔஷதத்தின் மேலானகுணத்தை யறிந்து எங்களை கனப்படுத்துவீர்களென்று சர்வவல்ல தயாநிதியாகிய கடவுளை பிரார்த்திக்கின்றோம். சகலவித நோய்களையும் நேரில் பரீக்ஷித்தபிறகே தக்க ஔஷதம் கொடுக்கப்படும் நடக்க சக்தியற்றவர்கள் கட்டணம் கொடுத்தால் வந்து பரிக்ஷிக்கப்படும் வெளியூரார் வியாதியின் குண விபாகங்களை திருத்தமாய் எழுதினால் தக்க ஔஷதம்குறைந்தவிலைக்கு அனுப்பப்படும்

சுகானந்த சஞ்சீவி மாத்திரை

பாலர் முதல், வயோதிகர்வரை உபயோகிக்கும் சஞ்சீவி 25 மாத்திரைகளடங்கிய சீசா ஒன்றுக்கு ...	0 10 0
காபுல் உயர்ந்த பால்பெருங்காயம் 12 தோலா டின் 1க்கு ...	1 0 0
இந்ரூணி கூந்தல்தைலம் சீசா ஒன்றுக்கு	1 0 0
பரிமள ஸ்நானப்பவுடர் டின் ஒன்றுக்கு ...	0 12 0
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டபல் தூள்டின்1க்கு	0 4 0

வணம்மூலிகா பிரமேக நிவாரண எண்ணெ 4 அவுன்ஸ் புட்டி 1க்கு 3 0 0

சர்வரோக சஞ்சீவி சீசா ஒன்றுக்கு 1 0 0

குழந்தைகளுக்கு மாந்தத்திர்க்கு எண்ணெ ...	1 0 0
கண்ணெண்ணெ சீசா ஒன்றுக்கு ...	1 0 0
பல்வலி திராவகம் சீசா ஒன்றுக்கு	0 12 0
கர்ணபிந்து ...	0 12 0
நேத்திர சஞ்சீவி	1 0 0

வேண்டுவோர்கள் நேரிலும் அல்லது வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

அனுபானம் பத்தியம் முதலியவைகள் மருந்துடன் அனுப்பப்படும்.

மஹாராஜ[redacted]வைத்தியசாலை,

29-ம் தெ, வீடு 120-வது கல்லூரி ஸைடபஸ்த்தி, இரங்கோன்.

சாமிவேல் பவர் அச்சுக்கூடம்.

தேன்காஞ்சி, இரங்கோன்.

எமதன்பார்ந்த நேயர்காள்!

எமது அச்சேந்திரசாலையானது முதன் முதலில் நன்கு பெயர் விளங்கிவந்த போதினும், சின்னாட்களாக சாம்பலின்கீழ் நெருப்பைப்போலத் தனதிடமே தெரியாதிருந்தன. இது விஷயமாக எமது அச்சேந்திர சாலையைக்காண விரும்பிய அன்பர்கள் கருத்தொழிந்தனர் என்பதை அறிந்த யாம் அன்னவர்களின் குறையகற்றி ஆனந்தங்கொள்ளுமாறு கைதேர்ந்த நல்ல வேலைக்காரர்களைக்கொண்டு இப்போது வேலை நடந்துவருகிற தென்பதைத் தங்களுக்குச் சொல்லத் துணிந்தோம். எமது அச்சுக்கூடத்தில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, பர்மா முதலிய பாஷைகளில் அவரவர்கள் மனம்போலவும் விசித்திரமாகவும் பலவர்ணமைகளினால் அழகாகவும் சுத்தமாகவும் செய்துகொடுப்போமென்பதால் சந்தோஷிக்கக் கோருகிறோம். இதுவுமன்றி வியாபாரிகளுக்கு வேண்டிய பில், ரசீது, மிமோ, லெட்டர்தாள், கவர்கூடு முதலியவைகளும் நமது செட்டிப்பிள்ளைகளுக்கு வேண்டிய உண்டியல், சிட்டை, தினசரி குறிப்பு, பேரேடு, நகல், கணக்குப் புத்தகம், ரசீது புத்தகம், அண்டிமெண்டு, ஒற்றைத்தாள், இரட்டைத்தாள் முதலிய எல்லாவித வேலைகளும் செய்து கொடுக்கப்படும். கல்கத்தாவிலிருந்து தருவிக்கப்பட்ட கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு அட்டைபண்டு, புல்பைண்டு சாதாரணபைண்டு முதல் யாவும் வெகு உறுதியாகவும், அழகாகவும் செய்துகொடுப்போம். ஆதலால் தங்களது ஆர்டர்களை எங்களது பவர் அச்சேந்திரசாலையில் கொடுத்து பரம சந்தோஷமடைந்து சுகமே வாழ்வீர்களென்று இதனால் தங்களுக் குரைக்க முன்வந்துள்ளோம். இதோடு புதிய எழுத்துகள் வேண்டுவோர் இரண்டு மூன்று நாளுக்கு முன்னதாகத் தெரிவித்தால் தயாரித்துக் கொடுப்போம். எங்களது அச்சேந்திரசாலைக்கு வருவதை மறந்து வீணில் பணத்தைச் செலவிட வேண்டாம்.

வாங்குவதற்கு முந்துங்கள்! ஏமாந்து கவலையடையாதீர்கள்!

எவ்விதமான நோய்கட்கும் சஞ்சீவியே சிறந்த ஔஷதம்.

சகல ரோகங்களையும் தீர்க்கும் நண்பன். தீரும் வியாதிகள்:—

வீக்கம், நாடிவாதம், சுக்தவான், இருமல், தலைவலி ஜுரம், பிளேக், வயிற்றுவலி, ஜன்னி, விஷபேதி, காமாலை, வயிற்றுப் போக்கு, அஜீரணம், தலைச்சுற்றல், வயிற்றுப்பிசம், இன்புளுயன்ஸா, தொண்டைக்கம்மல், மலச்சிக்கல், ஜலதோஷம், அரையாப்பு, பிரமேகம், புளித்தயேப்பம், சூதகவலி, வெள்ளை, வெட்டை, சுவாசகாசம், ஹிருதயரோகம், மூலம், விஷஜுரம் முதலிய நோய்களையும், சம்ஹாரம் செய்யும் சக்தி வாய்ந்தது.

புட்டி ஒன்றுக்கு விலை ரூபாய் இரண்டு தான்.

சாமிவேல் வைத்தியசாலை, தேன்காஞ்சி, இரங்கோன்.

உ

குகன் றுணை.

சிவ-சண்முகவேல் கடாக்ஷ ஜோசிய வயித்திய

விளம்பரம்.

இதனால் சகலமான கன தனவான்களுக்கும் மற்றுமுள்ள இந்து சகோதரர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்,

இக்கலியுகமதில மகா வரப்பிரசாத திருவவதாரனாகிய ஸ்ரீ சிவ சுப்பிரமணியக் கடவுளின் திருவருள் கடாக்ஷத்தா லெனக்கு கிடைக்கப்பெற்ற அருமையான மூலிகையின் சக்தியினாலும், மகான்களான பதினென் சித்தர்களால் கூறப்பெற்ற வாகடங்களின் ஆதாரவினாலும், முன்னோர்களாலும், ஆயுள்வேத சாஸ்திரங்களாலும், கையாண்டுவந்த அற்புதமான அவுஷத முறைகளையும், நான் நெடுநாளாக வெகு பிரயாசையுடன் ஆராய்ச்சிசெய்து தற்காலம் நம்மானிட தேகத்திற் கேற்றவைகளாய் பொறுக்கிச் சேகரித்து வாத, பித்த, சிலேட்டுமத்தாலேற்படும் சகலமான நோய்களையும், சீக்கிரத்தில் கண்டித்து குணங்கொடுக்கக்கூடிய வல்லமையுள்ளதாகவும் கடும்பத்திய மில்லாமலும் பாலர்முதல் விருத்தர்வரை தேவாமிர்தம்போல் சாப்பிடக்கூடியதாய் செய்பாக விதிப்படி அவுஷதங்கள் செய்து பிறருக்குக் கொடுத்து பரீட்சித்துப் பார்த்து நாளதுவரை என் [illegible] கையாண்டுவரும் மருந்துகளை பரோபகாரமாக [illegible] யாவரிடத்திலும் பெரும் லாபம் கருதாமல் அவ்வவர் வியாதிக்குத் தகுந்தபடி அவுஷதங்கள் செய்துகொடுத்து நற்சுகமாய் நடைபெற்று வருகின்ற மருந்துகள், தைலங்கள், லேகியங்கள், முதலான மருந்துகள் வேண்டியவர்களும் அவரவர்கள் பேர்ராசிகளுக்கு நடக்கும் நன்மைதீமைகளை ஜோசிய மூலியமாய் கேட்கவிருப்பமுள்ளவர்களும், இதனடியில் கண்டவரிடம் நேரில் அறிந்து அவரவர் விரும்பும் விஷயங்களைக் கைப்பற்றி மனமகிழ்வுறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

சிவ-சண்முகவேல்-கடாக்ஷ ஜோசிய வயித்தியர்,

பி. ஆர் பி. எ.

தாக்களா.

இப்புஸ்தகம் வேண்டியவர்கள் ரெங்கோன் எட்வார்ட் ஸ்ட்ரீட், 613, 614, 615, நெம்பர் ஜவுளி வியாபாரம், கொ. மு. அப்துல் ரகிமான் அவர்களிடத்திலும், புஸ்தகக்கடைகளிலும், பெற்றுக்கொள்ளலாம்.

புதிதாய் பாடின பர்மா டாப்பு வழிநடைச்சிந்தும் சண்முகபிரான் சங்கீத கீர்த்தனமும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.